INFORMATION / NEWS / TECHNICAL / ARTICLES / ACHIEVEMENTS

Volume 02, Issue 11

# WINDCARE Chronicle

Praise the Lord

December 08, 2008

**Web**: www.windcareindia.com

*Reaching you with News drops!*

## Our Services

Without Crane Technology

Wind park Operation

Maintenance & Services

Service Centre

Turnkey Project

Small Wind Turbine

Consultancy

## Our Vision

To ensure our customers receive a satisfactory services from a number one service provider.

Enhance the contribution of our services to the global market and provide continuous support to the global efforts in attaining energy Independence.

## HR Department:-

நமது நிறுவனத்தின் மனித வள மேம்பாட்டு துறையின் மேலாளராக பொறுப்பேற்றுள்ள **திரு. P. ஜோப் பிரவீன்** அவர்களை அறிமுகம் செய்கிறோம். சுமார் 17 வருட அனுபவமுள்ள இவரைக்கொண்டு நமது நிறுவனத்தின் பணியாளர்களின் தேவைகள் மற்றும் நலனுக்கு தேவையான அனைத்து செயல்பாடுகளையும் முறைப்படி மிகவும் சிறப்பாக செயல்படுத்த உள்ளோம். உங்கள் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புகள் ஆகியவற்றை பகிர்ந்துகொள்ளுங்கள்.



**Contact:**

Cell: +91-97502 68171
hrd@windcareindia.com

## நமது சிந்தனைக்கு – பணி என்ற பரிசு

எல்லோராலும் எல்லாவற்றையும் செய்துவிட முடியாது,. ஆனால் ஒவ்வொருவரும் எதையாவது செய்துமுடிக்கும் சிறப்பு பெற்றவர்களே...

.... நம்ம டீம்ல திறமைசாலின்னா அந்தாளுதான்யா.. என்ற எண்ணம் மற்றவர்களுக்கு திறமை இல்லாதது போல உணர்த்துகிறது. இது முற்றிலும் தவறான உணர்வு. வேதாகமத்தில் நாங்கள் அலங்கத்தை (கோட்டை சுவர்) கட்டி வந்தோம் ஜனங்கள் வேலைசெய்ய ஆயத்தமாயிருந்தார்கள். (நெகேமியா 4. 6) என்ற நிகழ்ச்சி, தலைமைத்துவத்திற்கும், இணைந்து பணிபுரிபவர்களுக்கும் உள்ள நல்ல முடிவு சார்ந்த உறவினை நம்பிக்கையோடு வெளிப்படுத்துகிறது. (Successful result oriented relationship with faith).

**வாழ்க்கை என்ற பயணத்தின் ஒவ்வொரு துளியையும் ஆனந்தமாக ஆக்கிக் கொள்கிற யாவரும் பணி என்றபங்கினை சிறப்பாக செய்பவரே!**

கேரள மாநிலம் தேக்கடி.. படகுசவாரி.. ஓர் அற்புதம்.. ஆழமான இயற்கை, இருபுறம் வளர்ந்த காடுகள், தென்றலின் இதம், ஆங்காங்கே காட்டு மிருகங்களின் நடமாட்டம், பெரியார் அணையின் மேல் தொட்டுத் தவழும் சுகமான அனுபவங்கள் ஒவ்வொரு நொடியும்..

60 பேர் செல்லும் பயணத்தில் பல படிப்பிணைகள், வசதியாக இடம் பிடிப்பதில் போட்டி அதில் ஒருசிலர் மட்டுமே பயணத்தை ரசித்தார்கள் மற்றவர்களில்சிலர் தூங்கி வழிந்தனர். வேறு சிலருக்கு எப்போது பயணம் எப்போது முடியும் என்பதே லட்சியமாக இருந்தது. அது மனதார பங்கேற்கும் நிகழ்ச்சி, நிலையான படிப்பு, சுகமான அனுபவம் அது எல்லோருக்கும் கிடைத்த பரிசு. மனதார செய்யும் பணி வாழ்க்கை பயணத்தில் நமக்கு கிடைத்த பரிசு.

**Courtesy: World Light Service Mission**

### அன்புக்குரியவர்களே...

மிகவும் வெற்றிகரமான தருணத்தில் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி, ஆம் நமது சகோதரர்கள் சிறப்பாக பணியாற்றி SUZLON 1.25-MW (23 ton t 74 mts. Dia) ROTOR unit DE & RE-Erection–ஐ வெற்றிகரமாக நமது WITHOUT CRANE TECHNOLOGY வாயிலாக முடித்துள்ளனர்.

இந்த வெற்றி நமது நிறுவனத்தை புதிய களத்திற்கு அழைத்துச் சென்றுள்ளது, அதனைத்தொடர்ந்து **1.5 MW Gearbox, 1.5 MW Rotor work**; and **2.1 MW Rotor** பணிகளுக்கு ஆயத்தப்பட்டு வருகிறோம். இந்த வெற்றியை உங்களது தனிப்பட்ட வெற்றியாக எண்ணுங்கள். இந்த முயற்சியில் ஈடுபட்ட அனைவரையும் நிறுவனத்தின் சார்பில் சிறப்பான வாழ்த்துக்களை தெரிவிக்கிறேன்.

ஆம் நாம் தேர்ந்தெடுத்திருப்பது 100 மீட்டர் ஓட்டம் அல்ல, மாரத்தான் ஓட்டம். இந்த வெற்றிப்பாதையில் தூரத்தைக்கண்டு மலைத்து சிலர் பின்வாங்கலாம், தடைகளில் சோர்ந்து நிற்கலாம், நிற்பவர்களைக் குறித்து.. பின்வாங்குபவர்களைக் குறித்து கவலை கொள்ளாமல் நம்மோடு இணைந்து பயணிப்பவர்களை உற்சாகப்படுத்தி உத்வேகத்தோடு இலக்கை அடைவோம்.

வெற்றி ஒன்றே நமது இலக்கு, பாதுகாப்புடன் பணியாற்றுங்கள், இணைந்து பணியாற்றி சிறப்புடன் வாழ்ந்திட வாழ்த்துகிறேன்.

அன்புடன்
**S. Antonyraj - Chief Executive.**

## சான்றிதழ்

அக்டோபர் மாத இதழில் கேட்கப்பட்ட Wind Turbine Maintenance தலைப்பில் கட்டுரை அனுப்பியவர்களில் திரு. N. மகேஷ்வரன் (VWT-CBE Magna site) தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவருக்கு சான்றிதழ் வழங்கப்படும். மேலும் பலர் பங்கேற்க உற்சாகப்படுத்துகிறோம்.

## திறமைக்கு வாய்ப்பு

நமது பணியாளர்களின் திறமைகளை வெளிப்படுத்த ஓர் வாய்ப்பு,,, சமுதாய சிந்தனைகள் மற்றும் விழிப்புணர்வுகள் நிறைந்த கவிதை சிறுகதைகள் மற்றும் கட்டுரைகள் வரவேற்கப்படுகிறது. தெரிந்தெடுக்கப்படும் படைப்புகள் பரிசுக்குரியவைகள்.

**சுயநலனே நமது பாதுகாப்பை அகற்றும் தீய சக்தி. உணர்வோம் பாதுகாப்பை**

**Edited By: P. Jebastin**
+91-94422 68143

## The Greatest Milestone to WINDCARE (SUZLON 1.25 MW ROTOR)



*1st 1.25MW Rotor work @ Maharastra.*

முதன்முறையாக உலகளாவிய சாதனையாக நமது அணியினர் SUZLON 1.25MW (23 Ton) ROTOR UNIT dismantling and re-erection வேலையை WITHOUT CRANE முறையில் மிகவும் சிறப்பாக வெற்றிகரமாக செயல்படுத்தியுள்ளனர். நவம்பர் 22–ல் மஹாராஷ்டிரா மாநிலத்தில் Nandurbar Site Location No. K–510 ல் இந்த சாதனையை மிகவும் சிறப்பாக, திட்டமிட்டு முறையான பாதுகாப்பு விதிமுறைகளை பின்பற்றி செயல்படுத்தியுள்ளனர்.

Trial Work – செப்டம்பர் 29–ல் தமிழகத்தில் Jr. Engineer M. KALIMUTHU தலைமையில் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து Operation North Head திரு. சிவக்குமார் மேற்பார்வையில் நமது குழுவினர் முறைப்படி சென்று ஆயத்தபணிகளை வெற்றிகரமாக முடித்தனர். நமது Chief Executive திரு. அந்தோணிராஜ் அவர்கள் நேரில் பார்வையிட்டு நமது அணியினரை உற்சாகப்படுத்தினார். 20–ம் தேதியில் De-erection Work வெற்றிகராக செயல்படுத்தினர் அதனைத்தொடர்ந்து 22–ல் Re-erection Work–ஐயும் முடித்து நிறுவனத்தின் பெயருக்கு மேலும் சிறப்பு பெற்றுத்தந்துள்ளனர். பங்கேற்று உழைத்த ஒவ்வொரு நபரையும் நிர்வாகம் வாழ்த்துகிறது. இந்த மிகப்பெரிய வாய்ப்பை நமக்கு அளித்து சிறந்த ஒத்துழைப்பையும் அளித்த SUZLON நிறுவனத்திற்கும் நன்றி.

Marketing, R&D, Operation Head, Special Team Technicians, Engineers, Design Engineer, Fabrication Team, Transport, Purchase and Stores Department அனைவரையும் வாழ்த்துகிறோம்.



WIND INDIA 2008



# wind exhibition

சென்னை நவம்பர் 25, 26–ல் நமது நிறுவனம் WINDINDIA–2008 என்ற Wind Energy Exhibition –ல் கலந்து கொண்டது. திரு. ஆன்டர்சன் சாமுவேல், திரு. சுரேஷ், திரு. சலீம் மற்றும் திரு. பாண்டியன் ஆகியோர் இணைந்த குழுவாக செயல்பட்டு ஆயத்தப்பணிகள், பேனர்கள் மற்றும் பிரவுச்சர்கள், பயணத்திட்டம் மற்றும் விசாரணைகளை திட்டமிட்டு சிறப்பாக செயல்படுத்தினர்.

நமது WITHOUT CRANE Technology erection பற்றியும் Small Wind Turbine பற்றியும் அநேக விசாரணைகள் கிடைக்கப்பெற்றதும் பல முன்னனி நிறுவனங்களின் பாராட்டுக்களை பெற்றதும் குறிப்பிடத்தக்கது. அதனை தொடர்ந்து இ–மெயில் வாயிலாக விசாரணைகள் வந்துள்ளன. நமது குழுவினரை நிர்வாகம் வாழ்த்துகிறது.

## BANGALADESH - NEW PROJECT



புதிய Project முயற்சிக்காக நமது திரு. அங்குசாமி, திரு. தேவபாலன் மற்றும் திரு. முருகன் ஆகியோரை கொன்ட குழு நேரில் பங்களாதேஷ் சென்று இடம் மற்றும் காற்றளவு ஆய்வ களை மேற்கொண்டு அறிக்கை மற்றும் விசாரணைகளை அனுப்பியுள்ளனர். நிர்வாகத்தின் அடுத்த முன்னேற்ற பாதையில் அடி எடுத்துவைத்துள்ள குழுவினரை நிர்வாகம் பாராட்டுகிறது.

## Vestas-RRB 500-KW Gearbox work

நவம்பர் 14, முதன்முறையாக நமது குழுவினர் VESTAS-RRB 500–KW WTG–ல் GEARBOX–ஐ காவல்கிணறு பணித்தளத்தில் வெற்றிகரமாக Without Crane Technology முறையில் இறக்கி நமது நிறுவனத்திற்கு மேலும் பெருமை சேர்த்துள்ளனர். திரு. திருவாளி மார்பன், திரு. மணி, திரு. சாமுவேல் திரு. தாமோதரன் மற்றும் அனைவரையும் நிர்வாகம் வாழ்த்துகிறது.



## வருந்துகிறோம்

நவம்பர் 18, காவல்கிணறு பணித்தளத்தில் பணியாற்றி வந்த புலித்துரை (வயது 21) நவம்பர் 15-ம் தேதி நடந்த சாலை விபத்தில் சிக்கி சிகிச்சை பலனின்றி காலமானார். அவரது பிரிவால் வாடும் குடும்பத்தினருக்கும் உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கும் நிறுவனம் ஆழ்ந்த வருத்தத்தை தெரிவிக்கிறது. அவரது ஆத்ம சாந்தியடைய பிராத்திப்போம்.

**ERP Software** திட்டமிட்டபடி நவமபர் மாதம் நிறுவப்பட்டு முதல் பகுதியாக மனிதவளத்துறையின் செயல்படுகள் கனணிமயமாக்கப்பட்டு வருகிறது.